# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.2 of 2025**

(Spl.C.C.No.4 of 2020 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.9 (L.W.18)

| | |
|---|---|
| Name | பிரபாகரன் |
| Father/Husband Name | துரைசாமி |
| Calling/Occupation | விவசாயம் |
| Age | 60 |
| Address | கிடங்கு ராமாபுரம், பொகலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025.

(A1, A2 and A4 absent and his absence condoned as u/s 355 of BNSS petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். 2011ம் வருடம் நான் பேரணாம்பட்டு ஒன்றிய குழு தலைவராக இருந்தேன். ஒன்றிய குழு தலைவர் என்ற முறையில் 29 ஒன்றிய கவுன்சிலர்கள் ஒன்றிய குழு தலைவரை தேர்ந்தெடுத்தார்கள். அந்த வகையில் நான் ஒன்றிய குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்தந்த பகுதியை சேர்ந்த கவுன்சிலர்கள் அந்த பகுதியில் மக்களுக்கு என்ன அத்தியாவசிய தேவை என தெரிந்து எழுத்து மூலமாக கொடுத்தால் அந்த இடத்தை

சென்று பார்த்த பின்னர் அது அத்தியாவசிய பணி என்று தெரிந்தால் ஒன்றிய குழு கவுன்சிலர்கள் தீர்மானம் நிரைவேற்றி அங்கீகரிக்கப்படுவதாக நான் கையொப்பம் போடுவேன். அந்த தீர்மானத்தில் அனைத்து கவுன்சிலர்களும் கையொப்பம் போடுவார்கள். 2012 ம் ஆண்டு குண்டலப்பள்ளி ஊராட்சி கோக்கனூர் கிராமத்தில் ஆழ்துளை கிணறு அமைப்பது சம்பந்தமாக தீர்மானம் நிரைவேற்றப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டது.

அப்பகுதி தண்ணீர் பிரச்சினை அதிகமாக இருந்தது. ஏற்கனேவ இரண்டு போர்கள் அந்த பகுதியில் போடப்பட்டிருந்தது. அதில் தண்ணீர் வரவில்லை. 1980–ம் ஆண்டு போட்ட கை பம்பில் நல்ல தண்ணீர் இருந்தது. அது 4 இன்ச் போர். அதை எடுத்துவிட்டு 6 ½ இன்ச் போர் போட்டார்கள். அதில் நன்றாக தண்ணீர் வந்தது. மின் மோட்டார் போட்டு சின்டெக்ஸ் டேங்க் மூலமாக தண்ணீர் விநியோகம் செய்தார்கள். நானும் போய் பார்த்தேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் பட்டியல் ஆவண எண் 14 நிர்வாக அனுமதி தீர்மான எண் 81 நாள் 30.04.2012 ஒன்றிய குழு தலைவர், ஊராட்சி ஒன்றியம் பேரணாம்பட்டு கையொப்பம் என்னுடையதுதான். மேற்கண்ட **நிர்வாக அனுமதி அ.த.சா.ஆ.9** ஆகும். தீர்மான எண் 89 அங்கீகரிக்கப்பட்டது என்று இடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் தீர்மான பதிவேடு **பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய குழு கூட்ட தீர்மான பதிவேடு 25.10.2011 முதல் (Volume –I) அ.த.சா.ஆ.10** ஆகும்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**கு.வி. அரசு தரப்பில்**

புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் மற்றும் சின்டேக்ஸ் டேங்க் அமைக்கத்தான் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தீர்மான எண் 89ல் ரூபாய் 2 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின் மோட்டார் அமைக்க பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்பகுதியில் இரு முறை போர்வேல் அமைத்து தண்ணீர் வராத காரணத்தால் என்று மேற்கண்ட தீர்மானத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் இருமுறை எந்த இடத்தில் போர்வேல் அமைத்து தண்ணீர் வரவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை.

புதிய தீர்மானத்திற்கு எவ்வளவு தொகை என்று சொல்லவில்லை என்றால் ரூபாய் 2 லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தீர்மான எண் 89க்கு தனியாக நிர்வாக அனுமதி கொடுக்கவில்லை என்றால் தனியாக கொடுக்கவில்லை. பொதுவாக நிர்வாக அனுமதி என்பது திருத்தப்பட்ட தீர்மானத்திற்கு நிர்வாக அனுமதி கொடுக்கப்பட்டு அது மாவட்ட ஆட்சியரிடம் கையொப்பம் பெற்றால்தான் அந்த தீர்மானம் முழுமை பெறும் என்றால் ரூபாய் 5 லட்சம் வரை ஒன்றிய குழுவிற்கு அதிகாரம் உள்ளது. M book உடன் வேலை செய்வதற்கு முன்பு, வேலை செய்யும்போது, வேலை முடித்த பின்னர் எடுக்கப்படும் புகைப்படங்கள் இணைக்கப்படும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தீர்மானம் எண் 81ல் எந்த இடத்தில் போர்வேல் போட வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. தீர்மானம் எண் 81ன்படி எனக்கு அதிகாரம் இருந்ததால் ரூபாய் 2 லட்சத்திற்கு அங்கீகாரம் கொடுத்தேன். தீர்மானம் எண் 81ன் படி முறைப்படி ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டது என்றால் சரிதான். முனுசாமி என்ற ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட்டது என்றால் டென்டரில் யார் யார் கலந்துக்கொண்டார்கள் என்று தெரியாது. இரண்டு இடத்தில் போர் போட்டு அங்கு தண்ணீர் வராததால்தான் இந்த இடத்தில் போடப்பட்டதா என்றால் இந்த நிர்வாக அனுமதியில் கொடுக்கப்படட ரூபாய் 2 லட்சத்தில் இரண்டு புதிய போர்கள் போடப்பட்டு தண்ணீர் வரவில்லை என்று சொல்வது தவறு வேறு தீர்மானத்தின்படி போர் போடப்பட்டு அதில் தண்ணிர் இல்லை என்று கண்டறியப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு இரண்டு போர் போட்டதற்கும் சம்பந்தம் இல்லை.

புவியியலாளர் அந்த இடத்தை பார்த்துதான் வேறு எங்கும் தண்ணீர் இல்லை பழைய போர் இருக்கும் இடத்தில் நீர் வளம் நன்றாக உள்ளது என்றும் அதை Flush out செய்து ஆழப்படுத்தலாம் என்ற அறிக்கை கொடுத்தார். அதனால்தான் தீர்மானம் எண் 89ல் பழைய ஆழ்துளை கிணறை ஆழப்படுத்தி மின் மோட்டார சின்டேக்ஸ் டேங்க் அமைத்து தண்ணிர் விநியோகம் செயய்க வேண்டும் என்ற தீர்மானம் போடப்பட்டது என்றால் சரிதான். தீர்மபானம் எண் 81ன் தொடர்ச்சிதான் தீர்மானம் எண் 89 என்றால் சரிதான்.

ரூபாய் 2 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டதால் வேறு ஒரு நிர்வாக அனுமதி தேவை இல்லை என்றால் ஆமாம். அதனால்தான் திருத்தப்பட்ட தீர்மானம் கொண்டு வரப்பட்டது. 4 இன்ச் போரில் மோட்டார் போட முடியாது என்றால் இது கூட சிறிய மோட்டார்தான். 4 ½ இன்ச் போரில் நீர் முழ்கி மோட்டார் போட முடியாது என்றும் 6 இன்ச் போரில்தான் நீர் முழ்கி மோட்டார் போட முடியம் என்றால் சரிதான். 4 இன்ச் போரை Flush out செய்துவிட்டு 6 இன்ச் போட வேண்டும் என்றால் மேலே இருந்து புதியதாக போட வேண்டும் என்றால் ஆமாம். 600 அடி போர் போட்டுதான் மோட்டார் இறக்கி தண்ணீர் இரைக்கிறார்கள் என்றால் ஊர்க்காரர்களும் கவுன்சிலரும் 600 அடி போட்டதாக சொன்னார்கள். முறைப்படிதான் வேலை செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.18 18:36:46 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.2 of 2025**

(Spl.C.C.No.4 of 2020 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.10 (L.W.19)

| | |
|---|---|
| Name | **சீனிவாசன்** |
| Father/Husband Name | **கருணாகரன்** |
| Calling/Occupation | **ஓய்வு** |
| Age | 62 |
| Address | **சின்னதாமாள், செருவூர்.** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025.

(A1, A2 and A4 absent and his absence condoned as u/s 355 of BNSS petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் நான் பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கணக்காளராக இருந்தேன். என்னுடைய பணி என்ன என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும், மாவட்ட ஊராட்சி அலுவலகத்திலிருந்து வரும் காசோலைகளை பெற்று ஆவணங்களில் பதிவு செய்து வங்கியில் வைப்பீடு செய்வேன்.

ஒரு தீர்மானம் வரப்பெற்றால் அதன் பெயரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரும் நபருக்கு அந்த பணி ஒதுக்கீடு செய்யப்படும். அந்த வேலைக்கான பணத்தை ஒப்பந்ததாரருக்கு Work Assistant பணி முடிந்துவிட்டதா என்றும் வேலையின் மதிப்பீடு குறித்தும் எவ்வளவு ரூபாய்க்கு வேலை செய்துள்ளார் என்றும், அந்த பணிக்கு பொருள் மூலமாக ஏதாவது கொடுத்திருந்தால் அந்த மதிப்பை கழித்து மேற்கொண்டு அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகளை பிடித்துக்கொண்டு நிகர தொகையை ஒப்பந்ததாரருக்கு காசோலை மூலமாக வழங்கப்படும்.

Work Assistant அந்த பணியை முடித்து என்னிடம் கொடுத்தால் அதை சரியாக உள்ளதா என்று மேலாய்வு செய்து சுருக்கொப்பம் செய்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர், நிர்வாகம் இருக்கைக்கு அனுப்பிவைப்பேன். அவர் மூலமாக வட்டார வளர்ச்சி அலுவலருக்கு சென்று அவர் ஒப்புதல் கொடுத்தவுடன் என் டேபிளுக்கு வந்த பின்னர் நான் செக் எழுதி மீண்டும் வட்டார வளர்ச்சி அலுவலர் பார்வைக்கு வைத்து அவர்தான் ஒப்பந்ததாரருக்கு காசோலை கொடுப்பார்.

ஓவர்சியரின் வேலை அந்த வேலையை நிரைவேற்றும்போது உடன் இருந்து கண்காணிப்பது. M book–ஐ பராமரிப்பவர் யார் என்றால் ஓவர்சியர் மற்றும் Union Engineer. என்னிடம் காண்பிக்கப்படும் M book (அ.த.சா.ஆ.8)–ல் என் சுருக்கொப்பம் உள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து பக்கம் 13 ல் சிவப்பு மையினால் இடப்பட்டுள்ள

சுருக்கொப்பம் 29.04.2012 என்று இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் பட்டியல் ஆவண எண் 12ல் 17.07.2012 தேதியிட்ட Cash/Credit bill Sri Chelliamman Hardware & Electrical என்ற பில்லில் உள்ள சிவப்பு மையினால் இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். ஒப்பந்ததாரர் பொருள் வாங்கியதற்காக கொடுத்த 17.07.2012 தேதியிட்ட ரசீது. அந்த **ரசீது அ.த.சா.ஆ.11** ஆகும்.

என்னிடம் காண்பிக்கப்படும் பட்டியல் ஆவண எண் 18ல் Final Contract Certificate–ல் ஆணையர், ஊராட்சி ஒன்றியம் என்று சீலிடப்பட்டுள்ள இடத்திற்கு இடது புறம் சிவப்பு மையினால் இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். **Final Contract Certificate அ.த.சா.ஆ.12** ஆகும். ரமேஷ் போட்டோ ஸ்டியோ என்ற ரசீதில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். **அந்த ரசீது அ.த.சா.ஆ.13** ஆகும். அ.த.சா.ஆ.11 ஐ பார்த்து சரிப்பார்த்த பின்னர்தான் நான் சுருக்கொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.11 ன் பின்புறத்தில் Providing New bore well motor sintex at Kokalur, Kundalapalli என்று எழுதப்பட்டுள்ளது. அது ராஜேந்திரன் என்ற Union Engineer ஆல் கையொப்பமிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக என்னை Vigilance போலீசார் விசாரித்தார்கள். ஒப்பந்ததாரருக்கு கொடுக்க வேண்டிய பட்டியல் Work Assistant தயார் செய்து என் பார்வைக்கு வைக்கப்பட்டு நான் பார்வையிட்டு தயார் செய்த பட்டியல் சரியாக உள்ளது என்று சுருக்கொப்பம் செய்து துணை வட்டார வளர்ச்சி

அலுவலர், நிர்வாகம் பார்வைக்கு வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் எடுக்கப்பட்டதற்காக பில்லிலும் Providing New bore well motor sintex at Kokalur, Kundalapalli என்றுதான் எழுதப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.12 கோப்பில் (பட்டியல் ஆவண எண் 18) உதவி செயற்பொறியாளர் டேவிட் அமிர்தராஜ் அவர்கள் Report Approved for Rs.1,99,000/- (One lakh Ninty Nine Thousand) என்று சீலிட்டு கையொப்பமிட்டுள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

Tender Schedule-ஐ Work Assistant இடமிருந்து பெற்று ஒப்பந்ததாரர் அதை பூர்த்தி செய்து Work Assistant இடம் கொடுத்து அவர் அதை சரிப்பார்த்து சுருக்கொப்பம் செய்துஅதன் பின்னர் அந்த Tender form என்னிடம் வரும். அதை நான் சரிப்பார்த்து சுருக்கொப்பம் செய்து நான் காசாலரிடம் அனுப்பிவிடுவேன். செலானை துணை வட்டார வளர்ச்சி அலுவலர், நிர்வாகம் அவர்களிடம் காண்பித்துதான் Tender form பெற வேண்டும் என்றால் சரிதான். Tender Form-ஐ கொடுக்கும் அதிகாரம் அவருக்குத்தான் உள்ளது என்றால் ஆமாம்.

கோக்களுர் கிராமத்திற்கு ஆழ்துணை கிணறு அமைக்கும் பணியில் முனுசாமி மற்றும் சரவணகுமார் இருவரும் பங்கேற்று ஒப்பந்தப்புள்ளி கோரினார்கள். அதில் முனுசாமி குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியதால் அந்த பணி அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். ஒப்பந்தப்புள்ளி திறப்பது சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் என்றால் சரிதான்.

டெண்டர் கிடைக்காதவர்கள் அவர்கள் டேபாசிட் செய்த பணத்தை திரும்ப பெற்றுக்கொள்வார்கள் என்றால் ஆமாம். சரவணகுமார் அவ்வாறு டெப்பாசிட் தொகையை திரும்ப பெற்றார் என்றால் ஆமாம். கள ஆய்வு செய்வது என் பணி அல்ல. கொடுக்கப்படும் ஆவணங்களை சரிப்பார்த்து சரியாக இருந்தால் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், நிர்வாகம் அவர்களின் பார்வைக்கு வைப்பேன். இந்த வேலை சம்பந்தமாக Audit objection எதுவும் இல்லை என்றால் ஆமாம் Audit முடிந்துவிட்டது Objection இல்லை.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.18 18:36:55 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.2 of 2025**

(Spl.C.C.No.4 of 2020 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.11 (L.W.20)

| | |
|---|---|
| Name | ரவி |
| Father/Husband Name | நடராஜன் |
| Calling/Occupation | ஓய்வு |
| Age | 63 |
| Address | குடியாத்தம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.11.2025.

(A1, A2 and A4 absent and his absence condoned as u/s 355 of BNSS petition filed and allowed.)

**முதல் விசாரணை**

நான் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். வழக்கு சம்பவ சமயத்தில் ஊர்நல அலுவலராக பேரணாம்பட்டில் பணியாற்றி வந்தேன். கிராமங்களில் தீர்மானம் நிறைவேற்றி கொடுத்தால் அந்த பணியை செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்தால் முதலில் ஒப்பந்தப்புள்ளி கோருவது வழக்கம். அந்த ஒப்பந்தப்புள்ளியில கலந்துக்கொளும் ஒப்பந்ததாரர்களில் குறைவாக எடுக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒன்றிய பொறியாளர் மேற்பார்வையில் அந்த பணிகள் செய்து முடிக்கப்படும். வேலை செய்து முடித்த பின்னர் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய பணம் சம்பந்தப்பட்ட M book ஐ ஒன்றிய பொறியாளர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுப்பார்கள். M book–ல் உள்ள தொகை மற்றும் பில்களை சரிப்பார்த்து பட்டியல் தயார் செய்து சுருக்கொப்பம் செய்து கணக்காளர் மூலமாக துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைப்போம். அவர் சரிப்பார்த்து வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

குண்டலப்பள்ளி கோக்கனுர் ஆழ்துளை கிணறு அமைத்த பணி தொடர்பாக யார் M book தயாரித்து கொடுத்தது என்றால் ஒன்றிய பொறியாளர் ராஜேந்திரன் மூலமாக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுத்தார்கள். உதவி செய்பொறியாளர் விக்டர் அமிர்தராஜ் மூலமாகவும் அனுப்பப்பட்டது. M book ஐ பார்த்து பட்டியல் தயார் செய்து M book ல் சுருக்கொப்பம் செய்து கணக்காளருக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் M book–ல் கருப்பு மையினால் இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் (ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், பேரணாம்பட்டு, வேலூர் மாவட்டம் என்ற சீலுக்கு இடது புறத்தில் 24.09.2012 என்று தேதியிட்ட கருப்பு மையினால் இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். அவர் அதனை சரிப்பார்த்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாகம் அமித் நவாஸ் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அந்த பணி நடைபெற்றதா இல்லை என்று வட்டார வளர்ச்சி அலுவலர்தான் உறுதி செய்ய வேண்டும்.

அவ்வாறு பணி நடந்ததாக வட்டார வளர்ச்சி அலுவலர் ஒப்பந்ததாரருக்கு செக் வழங்கியுள்ளார். நான் நேரில் கள ஆய்வு செய்வது என் பணி அல்ல. முனுசாமி என்பவரின் Tender schedule–ல் (பட்டியல் ஆவண எண் 13) (Original) என்ற ஆவணத்தில் Verified என்னும் இடத்தில் 10.05.2012 தேதியிட்ட சுருக்கொப்பம் என்னுடையதுதான். ஆனால் சரவணன் என்பவரின் Tender schedule–ல் (Original) என்ற ஆவணத்தில் Verified என்னும் இடத்தில் என்னுடைய சுருக்கொப்பம் இல்லை என்றால் என்னுடைய சுருக்கொப்பம் இல்லை. அவசர நிமித்தமாக சில ஒப்பந்ததாரர்கள் Tender schedule–ஐ என்னிடம் கொடுக்காமலேயே நேரடியாக Accountant இடம் கொடுத்து கையொப்பம் வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். (பட்டியல் ஆவண எண் 11) கேஷியரின் சுருக்கொப்பம் அதில் உள்ளது.

என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.11ல் Providing New bore well motor sin tex at Kokalur, Kundalapalli என்று எழுதி Union Engineer ராஜேந்திரன் என்பவரால் கையொப்பமிடப்பட்டு அதன் பின்னர் அந்த ஆவணத்தில் நான் 24.09.2012 அன்று கருப்பு மையினால் சுருக்கொப்பமிட்டுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் 15.05.2012 தேதியிட்ட பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் செயல்முறை கோக்கனூர் கிராமத்தில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் மற்றும் சின்டேக்ஸ் டேங்க் அமைத்தல் பணி குறித்த செயல்முறை ஆணையில் என்னுடைய சுருக்கொப்பம் உள்ளது.

மேற்கண்ட செயல்முறை ஆணை (பட்டியல் ஆவண எண் 17) மற்றும் உடன் இணைக்கப்பட்டுள்ள **Comparative Statement அ.த.சா.ஆ.14.** New bore well க்குண்டான Final Contract certificate ல் ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், பேரணாம்பட்டு, வேலூர் மாவட்டம் என்று சீலிடப்பட்ட இடத்திற்கு இடதுபுறத்தில் கருப்பு மையினால் இடப்பட்டுள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். அதே போன்று பாபு ஆர்டிஸ்ட் பேரணாம்பட்டு கொடுத்த ரசீதில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். **அந்த ரசீது அ.த.சா.ஆ.15** ஆகும். அதேபோன்று அ.த.சா.ஆ.13 ரமேஷ் போட்.டோ ஸ்டியோ வழங்கிய ரசீதில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். மேற்கண்ட இரண்டு ரசீதுகளின் பின்புறம் உள்ள Union Engineer, Panchayat Union, Pernampet என்று சீலிடப்பட்டு கையொப்பமிட்டுள்ளது ராஜேந்திரன் என்பவரினுடையது. இது சம்பந்தமாக Vigilance போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கோக்கனுர் கிராமத்தில் போர்வேல் டெண்டர் விடப்பட்ட அன்று 62 பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டது என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்த வெளியில் திறக்கப்பட்டது என்றால் ஆமாம். டெண்டர் திறந்த பின்னர் Comparative statement வெளியிட வேண்டும் என்றால் சரிதான். அந்த Comparative Statement வெளியிட நான் உதவியாக இருந்தேன் என்றால் சரிதான். குறைவான விலைப்புள்ளி கோரியவர் யார், அதிக விலைப்புள்ளி கோரியவர் யார் என்று அதில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான்.

கோக்கனூர் போர்வேலுக்கு முனுசாமி, சரவணகுமார் இருவரும் ஒப்பந்தப்புள்ளி கோரினர் அதில் முனுசாமி குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதால் அவருக்கு அந்த பணி ஒதுக்கப்பட்டது. பணி ஒதுக்கப்பட்ட பின்னர் உதவி பொறியாளர் மேற்பார்வையில்தான் பணி நடக்கும் அவர் முதலில் அதை அளவீடு செய்து அதை M Book–ல் எழுதுவார் என்றும் அதை உதவி செயற்பொறியாளர் Check measure செய்து M Book–ல் கையொப்பமிடுவார் என்றால் சரிதான். ஆவணங்களை நான் சரிப்பார்த்தபோது எல்லாம் சரியாக இருந்ததால் நான் சுருக்கொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.18 18:37:05 +0530